சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 2 | 02-06-2011

26-05-2011

## தலைப்பு : புதுப்புது மதக்குழுக்கள் - ஆன்மீக பீடங்கள் - சமூகம்

இத்தலைப்பில் மு. மயூரனின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,

* இந்த விடயப்பரப்புக்குள் அடங்கும் மதக்குழுக்களைக் குறிப்பதற்கான பொதுச்சொல்லாக எதனைக்கொள்ளலாம்? கள்ளச்சாமியார், போலி மதக்குழுக்கள், Cult போன்ற சொற்கள் போதுமானவையாக இல்லை. தற்போது சமூகவியல் துறையில் இந்த விடயப்பரப்புப்பற்றிய ஆய்வுகளில் பயன்படுத்தப்படு "new religious movements" என்ற சொல்லின் தமிழாக்கமான "புதிய மதக்குழுக்கள் " என்பது தெரிவு செய்யப்பட்டது.

* ஏற்கனவே நிலைபெற்றுள்ள மதக்குழுக்களின் நீட்சியாக அல்லது அவற்றின் கூறுகளை உள்வாங்கிக்கொண்டே இம்மதக்குழுக்கள் பெரும்பாலும் இருக்கும்.

* இந்து மதத்தின் கல்கி அவதாரம், கிறித்துவத்தின் "தீர்ப்பு நாள்" போன்ற பல்வேறு கருத்துக்கள் இவ்வாறு புதிய மதக்குழுக்கள் உருவாவதற்கு வாய்ப்பாக அமைகின்றன. இஸ்லாம் மிகக்கடுமையாக இறைவனுக்கு இணை வைப்பதையும் முகமது நபிக்குப்பிறகு தூதர்கள் இல்லை என்பதையும் வலியுறுத்துவதால் இஸ்லாத்தை அடிப்படையாகக்கொண்ட புதிய மதக்குழுக்கள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன.

* சமூகத்தில் நிகழும் அவலங்கள், எல்லா வர்க்கத்தினருக்கும் இருக்கக்கூடிய தனித்தனியான நெருக்கடிகள், ஏற்கனவே உள்ள மத நம்பிக்கையூடாக அவலங்கள் தீராத நிலை போன்றவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த அவலங்களுக்கு இலகுவாகத் தீர்வு பெற்றுத்தருவதாய் வாக்குறுதி அளித்துக்கொண்டு இம்மதக்குழுக்கள் தம்மை சமூகத்தில் பரப்புகின்றன. மக்களின் சுயநலங்களுக்கு தீனிபோடும் விதமான வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் இவை செல்வாக்குப்பெறுகின்றன.

* மக்களைத் தமக்குக்கீழ் திரட்டிப் பலம் பெறுவதாலும், ஆன்மீகம், தெய்வீகம் என்ற பெயரில் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட பிம்பத்தை இவை கட்டமைத்துக்கொள்வதாலும் பல்வேறு மக்கள் விரோத சக்திகள் இக்குழுக்களோடு சமரசம் செய்துகொண்டு இவற்றைப் பயன்படுத்துகின்றன.

* உளவுத்துறைகள் மக்களது கவனத்தைத்திசை திருப்பவும், பல்வேறு அரசியல் வேலைத்திட்டங்களை இரகசியமாக முன்னெடுக்கவும் மதக்குழுக்களைப் பயன்படுத்துகின்றன. மாபெரும் கறுப்புப்பண வைப்பகமாக ஆன்மீக மட்ங்கள் இயங்குகின்றன. சத்திய சாயி சமித்தி, நித்தியானந்தா யெகோவாவின் சாட்சிகள் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

* இலங்கையில் இறுதிப்போர் நடந்து கொண்டிருந்த போது தமிழர் பகுதிகளில் கல்கி பகவான் பரப்பப்பட்டதும், நக்சல் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக சத்தியசாயி இயங்கியதும் இங்கே உரையாடப்பட்டது.

* கல்கி பகவானின் போலித்தனங்கள் பற்றி சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சி இலங்கையில் சக்தி தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பாக வில்லை என்றும், பலமான மேலிடத்து அழுத்தங்கள் மூலமே அது ஒளிபரப்பப்படாமற் செய்யப்பட்டது என்றும் தகவல் கூறப்பட்டது.

* சமூக சேவை, தியானப்பயிற்சி என்ற முகமூடிகளை இக்குழுக்கள் எப்படிப்போட்டுக்கொள்கின்றன என்பது பற்றியும் தற்போது ஊடகங்களின் பரவல், வளர்ச்சி போன்றவற்றால் மெல்ல மெல்ல லிங்கம் எடுப்பது போன்ற சித்து விளையாட்டுக்களை விட்டுவிட்டு புத்திசாலித்தனமான ஏமாற்றுக்களை மதக்குழுக்கள் செய்கின்றன என்பது பற்றியும் விளக்கப்பட்டது.

* எவ்வளவு தான் தவறிழைத்தாலும் இம்மதக்குழுக்கள் மனிதருக்கு ஏதோ ஒரு விதத்தில் ஆறுதலாக, உளவளத்துணையாக இருக்கின்றன. எனவே இவற்றை அகற்றி விட்டால் பலர் தற்கொலைக்குக்கூடத் தள்ளப்படுவார்கள். இதற்கு என்ன மாற்று என்று கேட்கப்பட்ட கேள்வியைத்தொடர்ந்து, மனிதர் பகுத்தறிவு ரீதியாகச்சிந்தித்து தமது பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யப்பழகுவதே சரியான மாற்று என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

* மதங்கள் பற்றிய கார்ள் மாக்சின் கூற்று மொழிபெயர்க்கப்பட்டு வாசித்துக்காட்டப்பட்டது.

* மக்கள் கேள்விகளற்று எதனையும் ஏற்றுக்கொள்ளும் வழக்கத்தை விட்டுவிட்டால் மட்டுமே இவ்வாறான மதக்குழுக்களை ஒழிக்க முடியும் என்று கூறப்பட்டது.

## எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

02 - 06 - 2011

**உடலுழைப்பும் மூளை உழைப்பும்**
- சி. சிவசேகரம்

09 - 06 - 2011

**இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி**
- ரஞ்சன்

16 - 06 -2011

**பாலியல் தொழிற்துறையும் பெண்கள் மீதான சுரண்டலும்**
- தேவசபா தனுஜன்

23 - 06 -2011

**மதங்களின் தோற்றம்**
- இதயராஜா



**நீலாவணன் (மே 31, 1931 - சனவரி 11, 1975) ஈழத்தின் கவிதை மரபில் முக்கியமான கவிஞர்களுள் ஒருவராக கருதப்படுகிறார். மஹாகவி, முருகையன் ஆகிய பிரபல ஈழத்து கவிஞர்களோடு சமகாலத்தில் எழுதிவந்தவர். நீலா-சின்னத்துரை, அம்மாச்சி ஆறுமுகம், கொழுவுதுறட்டி, வேதாந்தி, நீலவண்ணன், எழில்காந்தன், *இராமபாணம், சின்னான் கவிராயர் ஆகிய புனைபெயர்களிலும் எழுதினார்.**

"ஒளி என்றாய் முன் ஒருபோது
உணர்ச்சி இருட்டென்றாய் பின்
வழியை விட்டு வாய்ச்சொல்லில்
வழுவி எங்கோ விழுகின்றாய்
தெளிவும் பெறுவாய் முடிவினிலே!
திரும்பி வருவாய் வரும்போதுன்
விழிகள் சொரியும் துயர்க் கவிதை
விரும்பி அதனை நுகர்வேன் நான்!"
-
நீலாவணன்


சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

# உடலுழைப்பும் மூளை உழைப்பும்

*02-06-2011* அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்
*-சி. சிவசேகரம்*

*உடல் உழைப்பு மனிதனின் இருப்பிற்கு அடிப்படையான செயற்பாடு; மூளை உழைப்பு மனிதனின் இருப்பும் அதன் மேம்பாட்டின் தேவையும் சார்ந்த அறிவு சார்ந்த செயற்பாடு.*

*மனித உடலுழைப்பாற்றல் மனித விலங்கின் உடலின் ஆற்றல் என்ற வரையறைக்குட்பட்ட நிலையிலிருந்து மேம்படுவதற்கு கருவிகளின் பயன்பாடு முக்கியமான பங்களித்து வந்துள்ளது.*

*கருவிகளின் தன்மை சமுதாய விருத்தியின் போக்கில் வெகுவாக மாறியும் முன்னேறியுமுள்ளது.*

*உற்பத்தி ஆற்றலின் உயர்வு சமூக உழைப்பின் தேவையின் அளவைச் சுருக்கி மனிதருக்குக் கூடிய ஓய்வு நேரத்தை வழங்குகின்றது. அவ் ஓய்வு பலவாறான தேடல்கட்கு வாய்ப்பளிக்கின்றது.*

*மேலதிக உற்பத்தியின் தொடர்ச்சியாக உருவான தனியுடமை, உழைப்பின் பங்கீடு, வர்க்க அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் என்பன உழைப்பின் தன்மை சார்ந்த ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகின்றன.*

*உடல் உழைப்பின் மேம்பாட்டுக்கு அறிவின் தேவை உள்ளதால், உடல் உழைப்பை முற்றாக மூளை உழைப்பில் இருந்து பிரிக்க இயலாது. எனினும் உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும் விகிதாசார அடிப்படையில் உள்ள வேறுபாடுகள் தொழில்களில் தொடர்ந்தும் பேணப்படுகின்றன.*

*உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்குமான ஏற்றத்தாழ்வான உறவின் உச்சநிலை நிலவுடமைச் சமூகதிற்குரியது. உடல் உழைப்பின் தன்மையும் அவ் வேறுபாட்டில் முக்கியமாகிறது. நிலவுடமை உற்பத்தி உறவுகள் போன பின்பும் நிலவுடமைச் சிந்தனை பல வடிவங்களில் நம்மிடையே எஞ்சியுள்ளது.*

*முன்னேறிய முதலாளியத்தின் கீழ், ஊதிய மட்டத்திலும் சமூக அங்கீகார அளவிலும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுடமைச் சமூகதினும் மிகக் குறைவானவை: உடல் உழைப்பின் சுமை குறைந்துள்ளமையும் இழி தொழில்கள் எனப்படுவன ஏற்கக்கூடியளவு வசதிப்படுத்தப்பட்டமையும் கவனத்திற்குரியன.*

*மூளை உழைப்பாளர்களது சமூக உணர்வு நிலையும் தம்மை மேலானவராக கருதும் போக்கும் --முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளில் -- அவர்களது உரிமைகட்கான போராட்டங்களுக்கு தடையாக உள்ளது.*

## வலை

**Whose steel? Who's stealing?**

*The Rs. 52,000 crore POSCO project has the figures to dazzle, but who's going to profit from it? TUSHA MITTAL finds it is not going to be Odisha's villagers*

**முழுமையாகப் படிக்க***:* valai.thulaa.net/9

*[மூலம் : http://www.tehelka.com/story_main48.asp?filename=Ne111210whose_steel.asp]*

**குழந்தைக்கு கல்வி கட்டணம் கட்டமுடியாமல் தாய் தற்கொலை!**

தன் குழந்தை படிக்க இயலாமல் தற்குறியாய் அலைய வேண்டியிருக்குமோ என்று எண்ணி அதை கற்பனை செய்யக்கூட சகிக்காமல் தற்கொலை செய்து கொண்டார் சங்கீதா. தனியார் கல்விக் கூடங்களும் கல்வி வியாபாரங்களும் கொலைகளைச்செய்கின்றன.

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/10

*[மூலம் : http://www.vinavu.com/2011/05/30/kovai-sangeetha-suicide/ ]*

**நவகொலனியத்தின் கீழ்த் தேசியமும் தேசமாதலும்**

நவகொலனியத்தின் கீழ்த் தேசியமும் தேசமாதலும்:
வரைவிலக்கணப் பிரச்சனைகள்

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/11

*[மூலம் : http://thulaa.net/home/archives/304]*

**அருந்ததிராய் உரை: வெற்றி மக்களுக்கே!**

அருந்ததிராயின் உரை தண்டகாரண்ய காட்டில் கார்ப்பரேட் இந்தியப் பேரரசு நடத்தி வருகிற அழித்தொழிப்பு, படுகொலை அரசியலை பதிவு செய்கிறது.

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/12

*[மூலம் : http://www.thiruvalluvar.in/2010/08/blog-post.html ]*

## நிகழ்வுகள்

*முத்தமிழ் விழா-2011*
கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடாத்தும் நாடளாவிய தமிழ் கலாசார விழா.

*சனிக்கிழமை, ஜூன் 4 · 4:00pm - 8:30pm*
*இராமகிருஷ்ணமிசன் மண்டபம்-*

**இஸ்ரேலின் உருவாக்கம்**
நூல் வெளியீடு

*ஞா. சிறீமனோகரன்*
*ஜூன் - 5 , மாலை 4 மணி*
தேசிய கலை இலக்கிய பேரவை - கைலாசபதி கேட்போர்கூடம்

**பனையோலை**
ஆவணப்படுத்தற் செயலமர்வும் மாதாந்த ஒன்றுகூடலும்

நூலகம் நிறுவனம்

*ஜூன் - 5 , மாலை 3 மணி*
கொழும்பு தமிழ் சங்கம் - விநோதன் மண்டபம்